செய்திப் பணிப்பாளர்/செய்தி ஆசிரியர் 2023 டிசம்பர் 21

**செய்தி வெளியீடு**

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2021=100): நவம்பர் 2023**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**

2013=100 என்ற சுட்டெண் குறுப்பீட்டுக் காலத்தைக் கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) 2023 ஜனவரி முதல் 2021=100 என்ற புதிய சுட்டெண் குறிப்பீட்டுக் காலத்துக்கு இற்றைப்படுத்தப்பட்டது. 2023 நவம்பர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது 2.8% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2023 ஒக்டோபர் மாதத்தின் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 1.0% ஆக இருந்தது. 2023 நவம்பர் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புக்கள் முறையே 1.0% மற்றும் 3.9% ஆக காணப்படுகின்றன. மாதாந்த அடிப்படையில் உணவுப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2023 ஒக்டோபர் மாதத்தில் பதிவாகிய -5.2% இல் இருந்து 2023 நவம்பர் மாதத்தில் 2.2% இற்கு அதிகரித்திருந்தது. உணவல்லாப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமும் 2023 ஒக்டோபர் மாதத்தில் பதிவாகிய 6.3% இல் இருந்து 2023 நவம்பர் மாதத்தில் 7.1%வரை அதிகரித்துள்ளது.

மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில், 2023 ஒக்டோபர் மாதத்தில் பதிவாகிய 203.6 இலிருந்து 2023 நவம்பர் மாதத்தில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) (அடிப்படை 2021=100) 206.0க்கு அதிகரித்துள்ளது. இது 2023 ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2.4 சுட்டெண் புள்ளிகள் அல்லது 1.19 வீத அதிகரிப்பைக் காட்டுகிறது. உணவு மற்றும் உணவல்லாப் பொருட்களில் முறையே 0.77% மற்றும் 0.43% ஆல் ஏற்பட்ட அதிகரிப்புகள் இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கு பங்களித்தது.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்புகள் பிரதானமாக காய்கறிகள், அரிசி, சீனி, தேங்காய், பெரிய வெங்காயம், பச்சை மிளகாய், சிவப்பு வெங்காயம், தேசிக்காய், தேங்காய் எண்ணெய், உருளைக்கிழங்கு, மைசூர் பருப்பு, தேயிலை தூள்/இலைகள் மற்றும் புதிய பழங்கள், என்பவற்றின் பொருட்டு பதிவாகின. எவ்வாறாயினும், புதிய மீன், கோழி இறைச்சி, முட்டை, மற்றும் பாசிப்பயறு, மிளகாய்த்தூள் ஆகியவற்றின் விலை குறைப்புகள் பதிவாகின.

முந்தைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 நவம்பர் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புகளுக்கு பிரதான காரணம் 'வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்' (பராமரிப்புப் பொருட்கள் மற்றும் மின்சாரப் பட்டியல்) மற்றும் 'உணவகங்களும் ஹோட்டல்களும்' ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். எவ்வாறாயினும், "போக்குவரத்து" (பெட்ரோல்), 'அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் மதிமயக்க மருந்துகள்' (வெற்றிலை), மற்றும் 'சுகாதாரம்' (மூக்குக் கண்ணாடிகள்), ஆகிய பிரிவுகளில் விலை குறைப்புகள் பதிவாகின. மேலும், 'ஆடையும் காலணியும்' 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு', 'பொழுதுபோக்கும் கலாசாரமும்' மற்றும் 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்' ஆகிய பிரிவுகளில் மிகவும் குறைந்த விலை குறைப்புகள் பதிவாகின. அதேநேரம், 'தொடர்பாடல்' மற்றும் 'கல்வி' ஆகிய பிரிவுகளில் விலைக் குறியீடுகள் இந்த மாதத்தில் மாறாதிருந்தன.

2023 நவம்பர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) (அடிப்படை 2021=100) அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது 2023 ஒக்டோபர் மாதத்தில் பதிவான 0.6% இல் இருந்து 0.8% இற்கு அதிகரித்துள்ளது.

**தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை 2021 = 100), தே.நு.வி.சு.(மைய), வருடத்தின் மீது வருட முதன்மை மற்றும் வருடத்தின் மீது வருட மைய பணவீக்கம்.**




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2021 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) |
| | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் | | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் |
| 2022 | நவம்பர் | 200.3 | 233.2 | 179.1 | 187.8 | -0.6 | -0.1 | | | | |
| | டிசெம்பர் | 200.4 | 232.4 | 179.8 | 188.0 | 0.0 | 0.1 | | | | |
| 2023 | ஜனவரி | 201.8 | 232.8 | 181.8 | 189.8 | 0.7 | 1.0 | 53.2 | 53.6 | 52.9 | 52.0 |
| | பெப்ரவரி | 204.1 | 228.1 | 188.6 | 189.4 | 1.1 | -0.2 | 53.6 | 49.0 | 57.4 | 50.1 |
| | மார்ச்சு | 204.8 | 223.2 | 193.0 | 188.1 | 0.3 | -0.7 | 49.2 | 42.3 | 54.9 | 44.2 |
| | ஏப்ரல் | 202.7 | 223.8 | 189.1 | 188.2 | -1.0 | 0.1 | 33.6 | 27.1 | 39.0 | 31.8 |
| | மே | 203.1 | 226.1 | 188.3 | 187.8 | 0.2 | -0.2 | 22.1 | 15.8 | 27.6 | 21.6 |
| | யூன் | 203.3 | 228.4 | 187.1 | 186.5 | 0.1 | -0.7 | 10.8 | 2.5 | 18.3 | 11.3 |
| | யூலை | 201.9 | 227.5 | 185.3 | 188.0 | -0.7 | 0.8 | 4.6 | -2.5 | 10.9 | 6.3 |
| | ஆகஸ்ட் | 201.9 | 224.6 | 187.3 | 188.7 | 0.0 | 0.4 | 2.1 | -5.4 | 9.0 | 4.1 |
| | செப்ரெம்பர் | 203.5 | 226.7 | 188.5 | 189.0 | 0.8 | 0.2 | 0.8 | -5.2 | 5.9 | 1.7 |
| | ஒக்ரோபர் | 203.6 | 224.1 | 190.4 | 189.2 | 0.0 | 0.1 | 1.0 | -5.2 | 6.3 | 0.6 |
| | நவம்பர் | 206.0 | 228.1 | 191.8 | 189.3 | 1.2 | 0.1 | 2.8 | -2.2 | 7.1 | 0.8 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்